| காலாண்டுத் தேர்வு - 2024 | | தேர்வு எண் |
|---|---|---|
| காலம் : 3.00 மணி | XII - பொருளியல் | மதிப்பெண் : 90 |

## பகுதி - 1

குறிப்பு: 1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (20×1=20)

2) ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. 'மேக்ரோ' (Macro) என்ற வார்த்தையை அறிமுகப்படுத்தியவர் யார்?
   அ) ஆடம்ஸ்மித் ஆ) ஜே.எம்.கீன்ஸ்
   இ) ராக்னர் பிரிக்ஸ் ஈ) காரல் மார்க்ஸ்
2. பகிர்வில் சமத்துவத்தை கடைப்பிடிக்கிற பொருளாதார அமைப்பு ________ ஆகும்
   அ) முதலாளித்துவ அமைப்பு ஆ) உலகமயத்துவ அமைப்பு
   இ) கலப்புப் பொருளாதார அமைப்பு
   ஈ) சமத்துவ பொருளாதார அமைப்பு
3. கீழ்வருவனவற்றுள் ஓட்ட மாறிலியை கண்டுபிடி
   அ) பண அளிப்பு ஆ) சொத்துக்கள்
   இ) வருவாய் ஈ) வெளிநாட்டுச் செலாவணி இருப்பு
4. ________ துறையில் செலவு முறையில் தேசிய வருவாய் மதிப்பிடப்படுகிறது
   அ) கட்டடத்துறை ஆ) விவசாயத்துறை
   இ) பணித்துறை ஈ) வங்கித் துறை
5. NNP என்பது ________
   அ) Net National Product ஆ) National Net Product
   இ) National Net Provident ஈ) Net National Provident
6. PQLI என்பது ________ன் குறியீடு ஆகும்
   அ) பொருளாதார வளர்ச்சி ஆ) பொருளாதார நலன்
   இ) பொருளாதார முன்னேற்றம் ஈ) பொருளாதார மேம்பாடு
7. அமைப்பு சார் வேலையின்மையின் இயல்பு ________
   அ) இயங்கா சமுதாயம் ஆ) சமதர்ம சமுதாயம்
   இ) இயங்கும் சமுதாயம் ஈ) கலப்புப் பொருளாதாரம்
8. வேலை வாய்ப்பு பற்றிய தொன்மைக் கோட்பாட்டின் மையக் கருத்து என்பது
   அ) குறைந்து செல் விளைவுவிதி ஆ) தேவை விதி
   இ) அங்காடி விதி ஈ) நுகர்வு விதி
9. மொத்த அளிப்பு சமம் ________
   அ) C+I+G ஆ) C+S+G+(X–M) இ) C+S+T+(X–M) ஈ) C+S+T+Rf
10. ஒரு குறிப்பிட்ட வருவாய் அளவில், நுகர்வு அதிகரித்தால்
    அ) மொத்த தேவை உயரும் ஆ) ஏற்றுமதி உயரும்
    இ) வரியின் மூலம் வரும் வருவாய் குறையும்
    ஈ) இறக்குமதி செலவு குறையும்
11. மொத்த வருவாய்க்கும் வருவாய் மொத்த நுகர்வுச் செலவுக்கும் உள்ள தொடர்பு
    அ) நுகர்வுச் சார்பு ஆ) சேமிப்பு சார்பு
    இ) முதலீட்டுச் சார்பு ஈ) மொத்த தேவைச் சார்பு
    ஈ) இறக்குமதி செலவு குறையும்
12. மிகைப் பெருக்கி(Super Multiplier) என்ற கருத்தை முதன் முதலில் பயன்படுத்தியவர்
    அ) J.R. ஹிக்ஸ் ஆ) R.G.D.ஆலன் இ) கான் ஈ) கீன்ஸ்
13. இர்விங் ஃபிஷரின் பண அளவுக் கோட்பாடு பிரபலமான ஆண்டு
    அ) 1908 ஆ) 1910 இ) 1911 ஈ) 1914
14. MV=PT என்ற சமன்பாட்டில் V என்பது
    அ) வாணிபத்தின் அளவு ஆ) பணத்தின் சுழற்சி வேகம்
    இ) ரொக்கப் பணத்தின் அளவு ஈ) வங்கி மற்றும் கடன் பணஅளவு
15. கடன் உருவாக்கம் என்பதன் பொருள்
    அ) கடன் மற்றும் முன்பண பெருக்கம் ஆ) வருவாய்
    இ) செலவு ஈ) சேமிப்பு
16. ஏற்றுமதி - இறக்குமதி வங்கி துவங்கப்பட்டது?
    அ) ஜூன் 1982 ஆ) ஏப்ரல் 1982
    இ) மே 1982 ஈ) மார்ச் 1982
17. பண மாற்றுவீதம் நிர்ணயமாகும் சந்தை
    அ) பண சந்தை ஆ) அந்நிய செலாவணி சந்தை
    இ) பங்கு சந்தை ஈ) மூலதன சந்தை



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

18. இந்தியாவில் வெளிநாட்டு நேரடி மூலதனம் அனுமதிக்கப்படாத துறை?
அ) வங்கி ஆ) அணு ஆற்றல் இ) மருந்து உற்பத்தி ஈ) காப்பீடு

19. ஐ.பி.ஆர்.டி இவ்வாறாகவும் அழைக்கப்படுகிறது
அ) பன்னாட்டு பண நிதியம் ஆ) உலக வங்கி
இ) ஆசியான் ஈ) பன்னாட்டு நிதி கழகம்

20. ஆசியான் அமைப்பின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம்
அ) ஜகார்த்தா ஆ) புதுடெல்லி இ) கொழும்பு ஈ) டோக்கியோ

## பகுதி - 2

***குறிப்பு: ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.(கட்டாய வினா 30) (7x2=14)***

21. பொருளாதாரம் என்பதன் பொருள் யாது?
22. வருமானத்தில் வட்ட ஓட்டம் - வரையறு.
23. தனிநபர் வருமானம் என்றால் என்ன?
24. ஊரக வேலையின்மையின் முக்கிய இயல்பு யாது?
25. முடுக்கி வரையறு.
26. நெகிழிப் பணம் என்றால் என்ன? உதாரணம் தருக.
27. கடன் உருவாக்கம் என்றால் என்ன?
28. பன்னாட்டு வாணிகம் வரைவிலக்கணம் தருக.
29. எங்கு மற்றும் எப்பொழுது சார்க் தலைமை அலுவலகம் துவக்கப்பட்டது?
30. ஜே.எம்.கீன்ஸ் பற்றி சிறு குறிப்பு வரைக.

## பகுதி - 3

***குறிப்பு: ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.(கட்டாய வினா 40) (7x3=21)***

31. பேரியல் பொருளாதாரத்தின் முக்கியத்துவத்தை தருக.
32. காரணி செலவில் NNP விவரி.
33. தேசிய வருவாயின் பயன்களைப் பட்டியலிடுக.
34. தொகு அளிப்பை வரைபடம் மூலம் விளக்குக.
35. தன்னிச்சையான முதலீடு மற்றும் தூண்டப்படுகிற முதலீடு ஆகியவற்றை வேறுபடுத்துக.
36. பெருக்கி கருத்தின் குறைபாடுகளை குறிப்பிடுக.
37. பணமதிப்பு நீக்கத்தின் நோக்கங்களை குறிப்பிடுக.
38. பன்னாட்டுப் பொருளியலின் உள்ளடக்கத்தை பட்டியலிடுக.
39. பிரிக்ஸ் மாநாடு 2018ன் நிகழ்ச்சி நிரல் பற்றி எழுதுக.
40. பண அளிப்பினை தீர்மானிக்கும் காரணிகள் யாவை?

## பகுதி - 4

***குறிப்பு:அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (7x5=35)***

41. (அ) நடவடிக்கைகள் அடிப்படையில் ஒரு பொருளாதார அமைப்பு செயல்படுவதை விவரி. ***(அல்லது)***
(ஆ) தேசிய வருவாயைக் கணக்கிடும் முறைகளை விளக்குக.

42. (அ) முதலாளித்துவம், சமத்துவம், கலப்புத்துவம் இவற்றின் தன்மைகளை ஒப்பிடுக.
***(அல்லது)***
(ஆ) பொருளாதார ஆய்வில் சமூகக் கணக்கிடுதலின் அவசியத்தை விவரி.

43. (அ) வேலையின்மையின் வகைகளை விவரி.
***(அல்லது)***
(ஆ) மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தி திறனுக்கும் (MEC) முதலீட்டின் இறுதிநிலை உற்பத்தி திறனுக்கும் (MEC) உள்ள வேறுபாடுகள் யாவை?

44. (அ) தொன்மை கோட்பாடு மற்றும் கீன்ஸ் கோட்பாடு ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாடுகளை விளக்குக.
***(அல்லது)***
(ஆ) கீன்ஸின் நுகர்வுச் சார்பின் உளவியல் விதியினை வரைபடம் மூலம் விளக்குக.

45. (அ) பணத்தின் பணிகளை விளக்குக.
***(அல்லது)***
(ஆ) நாட்டின் பொருளாதார மேம்பாட்டில் வணிக வங்கிகளின் பங்கினை விளக்குக.

46. (அ) வணிகச் சுழற்சியின் பல்வேறு கட்டங்களை விவரிக்க.
***(அல்லது)***
(ஆ) பணவியல் கொள்கையின் நோக்கங்கள் யாவை? விளக்குக.

47. (அ) ஜேக்கப் வைனரால் வடிவமைக்கப்பட்ட வாணிப வீத வகைகளை விவரி.
***(அல்லது)***
(ஆ) பன்னாட்டு பண நிதியத்தின் நோக்கங்களை விளக்குக.



Scanned with OKEN Scanner